
# கழுகின் சத்தம்

## டிசம்பர் 11, 2023

## 2



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

ஆனால் நீங்கள் பயப்படாதவராய் அவரை நேசிப்பீர்களானால், அவரை அப்படியே இன்று இரவு ஏற்றுக்கொள்ளுங்கள், பின்பு என்ன நடக்கிறது என பாருங்கள், அவர் கண்டிப்பாக செய்வார். அது சரியே.



## செய்தி: 54-07-24 தேவனோடு ஒரு தனிப்பட்ட அனுபவம்

55. கவனியுங்கள், ஒரு நாளில் ஒரு பெரிய காளையானது என்னுடைய உயிரை எடுக்கும்படி வயல் வெளியி னூடாக ஓடி வந்தது.

அந்தக் காளையிடம் இருந்து தப்பித்துக்கொள்ள எனக்கு வழியில்லாமல் இருந்தது.

நான் பயப்படுவதற்கு பதிலாக, அந்த விலங்கிற்காக வருந்தினேன்.

அது சில அடிதூரம் என்னை நெருங்கிவிட்டது.

அது அப்போது தான், இரண்டு மாதத்திற்கு முன்பு பூர்க்ஸ் பண்ணையில்

ஒரு மாநிறம் கொண்ட (Colored) மனிதனை கொன்றுபோட்டது.

பிறகு நான் அதினிடத்தில் “உன்னுடைய சிருஷ்டிகரே என்னுடைய நேச இரட்சகர், நான் உன்னை தொந்தரவு செய்வதில்லை. நான் இப்பொழுது இந்த வயலைக் கடந்து என்னுடைய ஊழியத்தினிமித்தம் போய்க் கொண்டிருக்கிறேன். ஆகையால், இப்பொழுது நம்முடைய சிருஷ்டிகராகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே நீ அங்கே சென்று அந்த மரத்தின் கீழே படு” என்றேன்.

அந்த காளை என்னிடத்திலிருந்து சுமார் ஐந்து அடி தூரத்தில் ஓடி வந்து நின்றது. அது பார்ப்பதற்கு தன் பெலனை இழந்து காணப்பட்டது.

பின்பு அது வலது புறமும், இடது புறமும், சுற்றிப்பார்த்து அங்கிருந்து நடந்து

சென்று மரத்தடியில் படுத்துக்கொண்டது. அது சரியே.

அந்தக் காளைக்காக நான் வருந்தினேன். அதை நான் நேசித்தேன். அது நிச்சயமாக சரிதான்.

56. இப்பொழுது, அது கேட்பதற்கு பைத்தியக்காரத்தனமாக தோன்றும், ஆனால் நண்பனே, நான் இதை உங்களுக்கு சொல்லட்டும். அப்போஸ்தலனாகிய பவுலுடைய கையை சர்ப்பம் கடித்த பொழுது, அவர் 'ஐயோ சீக்கிரமாக அயோடினை அல்லது விஷத்தை எடுக்கக்கூடிய மருந்து ஏதாவதொன்றை கொண்டு வாருங்கள்“ என்று சொல்லி இருப்பாரானால், அது அவரை பாதித்திருக்கும். ஆனால் அவர் பரிசுத்த ஆவியினால் முழுவதும் நிரம்பி இருந்ததினால், அதைக் கண்டபொழுது சிறிது அளவு கூட

பயப்படாமல், அதை அப்படியே நெருப்பின் மேல் உதறிவிட்டு கடந்து போய் விட்டார். அது சரியே.

மக்கள் பயந்து போகிறார்கள்.

புற்றுநோய் தாக்கும் போது, 'ஓ நான் இறந்துவிடுவேன் என மருத்துவர் கூறி விட்டார்“ என்ற காரியம் அவர்களை பிடித்துக்கொள்கிறது. அது தான் உங்களை மரிக்கச் செய்கிறது.

நீங்கள், ”நான் கர்த்தராகிய இயேசுவின் ஊழியக்காரன், இங்கிருந்து கடந்து வெளியே போ. என்னை பிடித்துக்கொள்வதற்கு உனக்கு எந்த அதிகாரமும் இல்லை“ என்று சொல்லுங்கள்.

இதை உங்கள் இருதயத்திலிருந்து உணர்ந்தவர்களாய் சொல்லுங்கள். அதன் பிறகு என்ன நடக்கிறது என கவனியுங்கள்.

நீங்கள் அதை பாவனை செய்து நடிக்க முடியாது. நீங்கள் அதை பெற்றாக வேண்டும்.

ஒரு வேடனாக, காடுகளுக்குள்ளே, எத்தனை முறை நான் பயங்கரமான மிருகங்களை நேருக்கு நேர் சந்தித்து இருக்கிறேன். அவைகளை அப்படியே அங்கு நின்றுகொண்டு சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருப்பேன், அவைகள் அப்படியே திரும்பி சாலையின் ஓரமாக நடந்து போய்விடும். அது சரியே.

நீங்கள் பயப்படுவீர்களானால் அதை முயற்சிக்க வேண்டாம். ஆனால் நீங்கள் பயப்படவில்லையெனில், தொடர்ந்து முன்னேறி செல்லுங்கள்.

இன்றிரவு நீங்கள் பயப்படுவீர்களா னால், தேவனை நம்ப நீங்கள் முயற்சிக்க வேண்டாம். நீங்கள் திரும்பவும் மருத்துவ

ரிடத்தில் சென்று அவர் உங்களுக்கு என்ன செய்யகூடும் என்று அவரை கேட்டுக் கொள்வது உங்களுக்கு சிறந்ததாயிருக்கும்.

ஆனால் நீங்கள் பயப்படாதவராய் அவரை நேசிப்பீர்களானால், அவரை அப்படியே இன்று இரவு ஏற்றுக்கொள் ளுங்கள், பின்பு என்ன நடக்கிறது என பாருங்கள், அவர் கண்டிப்பாக செய்வார். அது சரியே.



கள்ள அபிஷேகம் பெற்றவர்கள் இருப்பார்கள், அவர்கள் தங்களை தீர்க்கதரிசிகள் என்று அழைத்துக் கொள்வார்கள். ஆனால் அவர்களை நீங்கள் எவ்விதம் அடையாளம் கண்டு கொள்வீர்கள்? வார்த்தையினாலேயே; அவர்கள் சரியா என்று வார்த்தையினால் நீங்கள் அறிந்து கொள்ள முடியும்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 64-08-23M கேள்விகளும் பதில்களும் COD #19

"கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத் தீர்க்க தரிசிகளும் எழும்பி...." கள்ளக்கிறிஸ்து கள்ள அபிஷேகம் பெற்றவன், ஏனெனில் கிறிஸ்து அபிஷேகம் பண்ணப்பட்டவர். "கிறிஸ்து என்றால்" அபிஷேகம் பண்ணப் பட்டவர்" என்று பொருள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? கள்ள அபிஷேகம் பெற்றவர்கள் இருப்பார்கள், அவர்கள் தங்களை தீர்க்கதரிசிகள் என்று அழைத்துக் கொள்வார்கள். ஆனால் அவர்களை நீங்கள் எவ்விதம் அடையாளம் கண்டு கொள்வீர்கள்? வார்த்தையினாலேயே; அவர்கள் சரியா என்று வார்த்தையினால் நீங்கள் அறிந்து கொள்ள முடியும். அவர்களை நாம் எவ்வாறு அடையாளம்

கண்டு கொள்வது? வார்த்தையினால் தான். அவர்கள். அவர்கள் வார்த்தையைக் கொண்டுள்ளதாக கூறிக் கொண்டு வார்த் தையை மறுதலிப்பார்களானால், அவர்கள் பிணியாளிகளை சொஸ்தமாக்கலாம். குரு டரின் கண்களைத் திறக்கலாம். ஆனால் அவர்கள் வார்த்தையை மறுதலிப்பார்களா னால், அதிலிருந்து விலகியிருங்கள். அது என்னவாயிருந்தாலும் கவலையில்லை, அந்த வார்த்தையில் நிலைத்திருங்கள் (பாருங்கள்?), ஏனெனில் "ஹூடு", இன்னும் மற்ற மாந்திரீக சக்தியினால் சுகமாக்கப் படுதல் நடப்பதை நான் அநேக முறை கண்டிருக்கிறன்.

42. இக்காலை வேளையில் தென் ஆப்பிரிக்காவிலிருந்து வந்துள்ள சகோ. சிட்னி ஜாக்சனும், சகோதரி ஜாக்சனும், இங்கு உட்கார்ந்திருக்கின்றனர். அவர் இங்கு நின்று கொண்டு அந்த பொருளை

எடுத்துக் கொண்டு. மாந்திரீக சக்தியினால் நடைபெறும் சிலவற்றை உங்களுக்கு எடுத்துக் கூற முடியும். ஏன், நிச்சயமாக, ஜனங்கள் விக்கிரகங்களிடம் வந்து சுக மடைகின்றனர். பாருங்கள், ஏன்?

43. அன்றொரு நாள் நான் பிசாசினால் சுகமளிக்க முடியாது என்று கூறினதைக் கேட்டு டாக்டர் ஹகர் என்பவர் என்னைப் பார்த்து கூச்சலிட்டார். அவர், "எத்த னையோ ஜனங்களுக்கு முன்பாக நிற்கும் நீர் பிசாசு சுகமளிக்க முடியாதென்று கூறுகிறீர். என் வீட்டின் அருகில் ஒரு ஸ்திரீ இருக்கிறாள். அவள் இடுப்பைச் சுற்றி ஒரு துணியைக் கட்டிக் கொண்டு அங்கு செல்கிறாள். அவளிடம் வரும் ஜனங்கள் அந்த துணியில் காசு போட வேண்டும். அவள் அவர்களைக் கையினால் தேய்த்து, அவளுடைய தலையிலிருந்து ஒரு மயிரைப் பிடுங்கி, அவர்களுடைய

இரத்தக் குழாய்களிலிருந்து இரத்தத்தை எடுத்து அந்த மயிரில் பூசி, அவளுக்குப் பின்னால் அதை எறிந்து விடுகிறாள். அவள் பின்னால் பார்ப்பதில்லை, ஏனெனில் அவ்விதம் செய்தால் ஜனங்களுக்கு வியாதி திரும்ப வந்து விடுமாம். அவர்களில் முப்பது சதவிகிதம் குணமடைகின்றனர். அப்படியிருக்க பிசாசினால் சுகமளிக்க முடியாது என்று நீர் கூறுகிறீர்" என்றார்.

44. நான், "ஓ, என்னே!' என்று நினைத்துக் கொண்டேன். அவருக்கு நான் இவ்விதம் கடிதம் எழுதினேன்: "அன்புள்ள ஐயா, ஒரு லூத்தரன் கல்லூரியின் தலைவர் தேவனுடைய வார்த்தைக்குப் பதிலாக ஒரு அனுபவத்தின் பேரில் தனது வேதசாஸ்திரத்தை ஆதாரமிடுவது விசித்திரமாயுள்ளது. பாருங்கள்? "சாத்தான் சாத்தானைத் துரத்துவதில்லை என்று வேதம் கூறுகிறது

(மத்.12:26). அத்துடன் அது முடிவு பெறுகிறது. இயேசு அவ்விதம். கூறியுள் ளார். சாத்தான்... அப்படியானால் இந்த ஜனங்கள் அதன் மூலம், அந்த மந்திர வாதியின் மூலம் எவ்விதம் சுகம் பெறுகின்றனர் என்று நீங்கள் வியக்கலாம். ஏனென்றால், ஜனங்கள் அந்த மந்திர வாதியின் மூலம் தேவனை அணுகுவதாக எண்ணுகின்றனர். சுகம் பெறுதல் விசுவா சத்தை ஆதாரமாகக் கொண்ட ஒன்றேயல் லாமல், நீங்கள் எவ்வளவு நீதியுள்ளவர்கள் என்பதையோ, எவ்வளவு நல்லவர்கள் என்பதையோ, நீங்கள் எவ்வளவாக கற்பனைகளைக் கைக் கொள்கிறீர்கள் என்பதையோ ஆதாரமாகக் கொண்டதல்ல, அது விசுவாசத்தையே ஆதாரமாகக் கொண்டது. 'விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்'. பாருங்கள்? நீங்கள் எவ்வளவு நல்லவர்கள் என்பதை அது

ஆதாரமாகக் கொண்டதல்ல. வேசிகள் மேடைக்கு வந்து உடனே சுகம் பெறுவதையும், பரிசுத்தவாட்டி ஒருத்தி மேடைக்கு வந்து அதை இழந்து போவதையும் நான் கண்டிருக்கிறேன். நிச்சயமாக, அது விசுவாசத்தை ஆதாரமாகக் கொண்டது. நீ விசுவாசித்தால், நீதியின் அடிப்படையில் அல்ல".



# இன்னிசைப் பறவையான நைட்டிங்கேல்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 53-04-05 S போய் என் சீஷர்களுக்குச் சொல்லுங்கள்

144. ஒரு இரவு இங்கே மில்டவுன் பாப்டிஸ்டு சபையில் ஒரு கூட்டம் நடத் திக்கொண்டு இருந்தேன். அப்பொழுது அங்கே நான் போதகராயிருந்தேன். என்னுடைய பழைய நண்பர் ஒருவரோடு இரவு முழுவதும் தங்கியிருக்கும்படி வீட்டிற்கு வந்து கொண்டு இருந்தேன். நான் வழக்கமாகவே கவனிப்பேன், நான் அங்கே கடந்து போகும்போது அங்கே ஒரு இன்னிசைப் பறவையான நைட்டிங்கேல் அங்கே தேவதாருப் புதரில் உட்கார்ந்து கொண்டிருக்கும். அதனுடைய உச்சக் குரலில் எவ்வளவு சத்தமாய் பாட முடியுமோ அவ்வளவு சத்தமாய் இரவெல் லாம் பாடும். பகல் வெளிச்சமாய்

இருக்கும் போது, ஏன் பறவைகள் பாடுகின்றன? என்பதை என்னால் எவ்வளவாய் நன்றாகப் புரிந்து கொள்ள முடிந்தது. என்னால் யூகிக்க முடிகின்றது. சூரிய வெளிச்சம் அவைகள் மேல் குளிப்பாட்டுவதே அவைகளை பாட வைக்கிறது. ஆனால் அந்த இன்னிசைப் பறவையான நைட்டிங்கேலை பாட வைப் பதுதான் என்ன?

145. எனவே நான் எனக்காக இன்னிசைப் பறவையான நைட்டிங்கேலைப் பற்றின ஒரு புத்தகத்தை வாங்கி வாசிக்கத் துவங்கினேன். அந்த நைட்டிங்கேலை, அதை இரவில் பாடவைப்பது என்ன வென்றால் அது ஆகாயத்தை கவனிக்கிறது என்பதை நான் கண்டறிந்தேன். ஒவ்வொரு முறையும் அதாவது அது மேகங்கள் அசையத் துவங்குவதை காணும் பொழுது, ஒரு நட்சத்திரத்தை காணும் பொழுது, ஒரு

ஒளிக்கதிரை காணும் பொழுது, அது சத்தமிடத் துவங்கி தன் உச்சக்குரலில் பாடத்துவங்குகிறது. ஏன்? ஏனென்றால் எங்கேயோ சூரியன் பிரகாசித்துக் கொண் டிருக்கிறது என்பதை அது அறிந் திருக்கிறது. சூரியன் எங்கேயோ பிரகா சித்துக் கொண்டிருக்கிறது என்பதை அது பூமிக்குத் திரும்பவும் கூறிக்கொண்டிருக் கிறது.

146. சகோதரனே, சகோதரியே இருண்ட மேகங்களின் வேதனை மற்றும் சோதனைகள், தொல்லைகள் என் இரு தயத்தின் ஊடாக ஆழத்திலே இருக்கு மட்டும் எப்பொழுதாவது ஒரு தடவை பரிசுத்த ஆவியானவர் மூலமாக அழுத்து வதையும், ஒரு ஆசீர்வாதத்தை எனக்கு கொடுக்கிறதையும் என்னால் உணர முடிந்தால் தேவ னுடைய வல்லமை இன்னமும் ஜீவிக்கிறதையும், எங்கேயோ


ஆளுகிறது என்பதையும் நான் அறிவேன், அது உண்மை.

147. "உன்னை அங்கே பிரகாசிக்கச் செய்கிறது என்ன? நீ ஏன் பிரகாசித்துக் கொண்டிருக்கிறாய்?" என்று என்னால் அந்த விடிவெள்ளி நட்சத்திரத்தைக் கேட்க முடிந்தால், நலமாயிருக்கும்.

148. அது, "சகோதரன் பிரன்ஹாம், பிரகாசித்துக் கொண்டிருக்கிறது நானல்ல" என்று கூறும். அந்த நட்சத்திரத்தினால் பேசமுடிந்தால் நலமாயிருக்கும். "சூரியன் தானே என்மேல் பிரகாசித்துக் கொண் டிருக்கிறது, அதுதான் என்னை பிரகாசிக்கச் செய்கிறது" என்று கூறும்.

149. அவருக்குள் மறைந்திருக்கிறது, இயேசு கிறிஸ்துவில் ஒரு விசுவாசியா யிருக்கிற ஒவ்வொரு மனிதனோடும் அது அந்த விதமாகத்தான் இருக்கிறது. அது

நீங்கள் பிரகாசிப்பது அல்ல, உன் மேல் பிரகாசித்துக் கொண்டிருப்பது பரிசுத்த ஆவியாயிருக்கிறது. அது உங்களுக்கு இந்த நம்பிக்கையையும், இந்த உயிர்த் தெழுதலின் சந்தோஷத்தையும் கொடுக் கிறது.



ஒரு சிறிய ராபின் பறவையைப் பாருங்கள். அது ஒவ்வொரு காலையும் எழும்பி, முதல் காரியமாய் தன்னுடைய முகத்தை வானங்களுக்கு நேரே உயர்த்தி, தன்னுடைய உச்சக்குரலில் பாடிக்கொண்டிருக்கும். நீங்கள் அவைகளில் ஒன்றையும் அதிக இரத்த அழுத்தத்தினாலோ, கக்கத்தண்டகளுடன் நடக்கவோ, சர்க்கரை வியாதியோடோ ஒருபோதும் பார்த்திருக்கமாட்டீர்கள்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 53-04-05 S போய் என் சீஷர்களுக்குச் சொல்லுங்கள்

140. இன்றைக்கு அவர் எங்களுடைய இருதயத்திற்குள் ஜீவிக்கிறார். அதனால் தான் நாங்கள் சந்தோஷமாயிருக்கிறோம். நாங்கள் பாட முடிகிறது. அதனால்தான் நாங்கள் அவரை கவனிக்க முடிகிறது. இங்கே அதிக நாட்களுக்கு முன்பல்ல, தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து என்னுடைய சொந்த ஜீவியத்தில் எனக்காக ஒரு மகத்தான அற்புதத்தை செய்தார். அவர் உங்களுக்காக அற்புதங் களை செய்திருக்கிறார். அவர் உங்களோடு தினமும் நடக்கிறார். அவர் ஒவ்வொரு விசுவாசியுடனும் நடக்கிறார். “இதோ நான் எப்பொழுதும் உங்களோடு இருக்கிறேன், உலகத்தின் முடிவு பரியந்தம் இருக்கி

றேன்." என்ன வந்தாலும் அல்லது போனா லும் கவலைப்பட வேண்டியதில்லை. இன்றைக்கு கிறிஸ்து இன்னமும் ஜீவிக்கி றார். மானிட இருதயத்தில் அரசாளுகிறார்.

141. அந்தக் காரணத்தினால் தான், கதை கூறினது போலவே, நீங்கள் கவனி யுங்கள். ஒவ்வொரு காலையும், நாம் அதிருப்தியோடு எழும்பி வெளியே போகிறோம். "நல்லது நான் சுமார் அரைத் தூக்கத்தில் இருக்கிறேன்." நமக்கு அதிக இரத்த அழுத்தம், சர்க்கரை வியாதி மற்றெல்லா காரியங்களும் இருப்பதில் வியப்பொன்றுமில்லை.

142. **ஒரு சிறிய ராபின் பறவையைப் பாருங்கள். அது ஒவ்வொரு காலையும் எழும்பி, முதல் காரியமாய் தன்னுடைய முகத்தை வானங்களுக்கு நேரே உயர்த்தி, தன்னுடைய உச்சக்குரலில் பாடிக்கொண்**

டிருக்கும். நீங்கள் அவைகளில் ஒன்றையும் அதிக இரத்த அழுத்தத்தினாலோ, கக்கத் தண்டகளுடன் நடக்கவோ, சர்க்கரை வியா தியோடோ ஒருபோதும் பார்த்திருக்கமாட்டீர்கள்.

143. ஒரு சமயம் ஒரு சிறிய ராபின் பறவை, "இந்த ஜனங்கள், இந்த காரியங்கள், மனிதவர்க்கம் என்று தங்களை அழைத்துக் கொள்ளுகின்ற சிருஷ்டிகள், இவர்களுடைய காரியம் என்ன என்று வியக்கின்றேன்" என்றதாம். அவர்கள் ஏன் அவ்வளவு விசனமாய் இருக்க வேண்டும்? நம்மேல் அக்கறை கொண்டுள்ள, நமக்கு இருக் கின்றது போன்றதொரு பரலோகப்பிதா ஒருக்கால் அவர்களுக்கு இல்லை போலும்" என்று கூறினதாம்.



# நீங்கள் அதை உடையவர்களாயிருந்தால் உங்களால் அமைதியாய் இருக்கவே முடியாது. ஏதோ காரியம் உனக்குள்ளாகவே இருக்கிறது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 53-04-05 S போய் என் சீஷர்களுக்குச் சொல்லுங்கள்

150. இங்கே பேசிக்கொண்டிருக்கையில், நான் வழக்கமாக தண்ணீர் குடிக்கும் ஒரு பழைய ஊற்றைக் குறித்து நான் வழக்கமாக கூறுவதுண்டு. அது பொங்கிக் கொண்டும், குதித்துக் கொண்டும், குதித்துக் கொண்டும், குதித்துக் கொண்டும் இருக்கும். அது மில்டவுனைச் சுற்றியிருந்த அந்த ஊற்று, ஏன் குதிக்கிறது என்று நான் வழக்கமாக ஆச்சரியப்படுவேன், எனவே ஒரு நாள் நான் அங்கே உட்கார்ந்து, அதனிடம் பேசிக்கொண்டிருந்தேன். ஒரு மனிதன் ஒரு ஊற்றண்டை பேசிக் கொண்டிருப்பதை யூகித்துப் பார்த்தீர்களா? ஆனால் அந்த ஊற்றை உண்டாக்கின இயற்கையினிடத்தில் நான் பேசிக் கொண்டிருந்தேன். நான், "உன்னை இவ்விதமாய் பொங்கவும், இவ்விதமாய்

குதிக்கவும் வைக்கிறதுதான் எது? பிள்ளைகள் இங்கு வந்து உன்னிடத்தில் தண்ணீர் குடிக்கிற காரணத்தினாலோ அல்லது நான் உன்னிடத்திலிருந்து குடிப் பதினாலோ அல்லது வேறொரு காரி யமா?" என்று வியப்படைந்திருக்கிறேன்.

151. அந்த ஊற்றினால் திருப்பிப் பேச முடிந்தால், அது, "இல்லை, பில்லி, நீ இதிலிருந்து தண்ணீர் குடிக்கும் காரணத் தினாலல்ல. மற்றவர்கள் என்னிடத்தி லிருந்து தண்ணீர் குடிக்கின்ற காரணத் தினாலும் அல்ல. அது ஏதோ காரியம் இங்கே எனக்குக் கீழாக இருந்து கொண்டு என்னை தள்ளிக் கொண்டிருக்கிறது. என்னைப் பொங்கவும், குதிக்கவும் இந்த விதமாய் செய்து கொண்டிருக்கவும் செய் கிறது" என்று கூறும்.

152. அந்த விதமாகத்தான் தேவ னுடைய ஆவியினால் பிறந்த ஒவ்வொரு மனிதனும் அல்லது ஸ்திரீயும் இருக்கின் றனர். அது நீங்களல்ல. அது மனுஷீக

எழுச்சியுமல்ல. அந்த உயிர்த்தெழுதல் அல்லது தேவனுடைய வல்லமை அந்த மனுஷீக ஜீவியத்திற்குள் இருக்கின்ற காரணத்தினால் நித்திய ஜீவனுக்குள்ளாக அதை அழுத்திக் கொண்டு மேலே தள்ளி நித்திய ஜீவனுக்குள்ளாக அசைந்து போகிறது. இங்கே உள்ளே இருக்கின்ற ஏதோ காரியம்! நீங்கள் அதை உடையவர்களாயிருந்தால் உங்களால் அமைதியாய் இருக்கவே முடியாது. ஏதோ காரியம் உனக்குள்ளாகவே இருக்கிறது.

153. இயேசுவானவர் எருசலேமுக்குள்ளாக நடந்து கொண்டே வந்தபோது, அவர்கள் குருத்தோலைகளை வெட்டி, கூச்சலிடத் தொடங்கி சத்தமிட்டுக் கொண்டு, அந்த விதமாய் செய்து கொண்டிருந்தனர். விரைத்துப் போன அந்த பரிசேயர்களில் சிலர், “அவர்களை அமைதியாய் இருக்கச் சொல்லுங்கள். ஏன்? அவைகள் எங்களுக்கு நடுக்கத்தை கொடுக்கிறது. ஓ, அந்த ஜனங்கள் எப்படி

யாய் கூச்சலிட்டுக் கொண்டே போய்க் கொண்டிருக்கிறார்கள்” என்றார்கள்.

154. அவர், “அவர்கள் அமைதியா யிருந்தால் இந்த கல்லுகள் உடனே சத்தமிடும்” என்றார். ஏதோ காரியம் உண்டாக வேண்டியதாக இருக்கிறது. மரணத்தின் மத்தியில் ஜீவன் வருகிற போது, ஒரு உயிர்த்தெழுதல் உண்டு; நிச்சயமாய் இருக்கத்தான் வேண்டும்.

155. நம்முடைய அன்பார்ந்தவர்கள் உறங்கிக் கொண்டிருக்கின்ற கல்லறைக்கு இயேசு கிறிஸ்துவுக்குள் இருந்த அந்த ஜீவன் வரும்பொழுது, அங்கே ஒரு உயிர்த்தெழுதல் உண்டாயிருக்கும். இருளும் வெளிச்சமும் எப்படி ஒன்றாய் இணைந்து இருக்கமுடியாதோ அதைப் போலவே மரணமும் ஜீவனும் ஒன்று சேர்ந்து வாசம் செய்ய முடியாது.

அவர்களில் அநேகர் வந்தார்கள், நான், ‘எனக்கு அதனோடு எந்த சம்பந்தமும் கிடையாது; அது ஒரு தேவனுடைய சாபம், எனவே அது உங்களைப் பொறுத்தது. கீழ்ப்படியாமலிருந்தவன் நீ தான். உனக்கு விசுவாசம் இல்லை என்றால், கூட்டத்தை விட்டு வெளியே போய் விடு என்றும், அதைச் செய்ய வேண்டாம் என்றும் நான் உன்னிடம் கேட்டுக் கொண்டேனே. இப்பொழுது, அது உன்னைப் பொறுத்தது. எனக்கு அதனோடு எந்த சம்பந்தமும் கிடையாது. நான் அந்த பாவத்திற்காக ஜெபிக்கவும் மாட்டேன். இல்லை, ஐயா. அது உன்னைப் பொறுத்தது’ என்று கூறி விட்டேன்.

---

# செய்தி: ஆபிரகாமோடு தேவனுடைய உடன்படிக்கை

ஒரு ஊழியக்காரர் ஒரு சபைக் கூட்டத்தினரை அழைத்துக் கொண்டு வந்தார். வலிப்பு நோயினால் அவதிப் பட்ட ஒரு பிள்ளையினிமித்தம் அவர்கள் தங்களுடைய தலையை தாழ்த்திக் கொண்டிருக்க வேண்டுமென்று நான் அவர்களிடம் கேட்டுக் கொண்டேன், அந்தப் பிள்ளை தன்னுடைய நாவைத் தொடர்ந்து கடித்துக் கொண்டிருந்தது; அவர்கள் அதனுடைய வாயில் ஒரு குச்சியை வைத்திருந்தனர், அல்லது, துணிகளைத் துவைத்துக் காயப் போடும் போது, அதை பற்றிப்பிடிக்க வைக்கும் கிளிப்போடு (clothespin), அதில் ஒரு துணியையும் வைத்து, அதனுடைய

வாயில் வைத்திருந்தனர் - அது ஆர்கன்ஸாஸிலுள்ள ஜோன்ஸ்பரோவில் நடந்த சம்பவமாகும். அவன் அவ்விதமாக இந்த நாவைத் தொடர்ந்து கடிக்க முயற்சித்துக் கொணடிருந்தான், அப்போது மேடையிலேயே அந்தப் பிள்ளைக்கு சிறிது நேரம் உணர்விழப்பு ஏற்பட்டது. நான், 'இப்பொழுது, நீங்கள் எல்லாரும் உங்களுடைய தலையைத் கீழே தாழ்த்தி வையுங்கள்' என்று கூறி விட்டு, நான் ஜெபிக்கத் துவங்கினேன். அவர்களோ தங்கள் தலையைத் தாழ்த்தி வைக்க வில்லை. நான் தொடர்ந்து சுற்றிலும் நோக்கிப் பார்த்து, 'உங்கள் தலையை உயர்த்தியிருப்பவர்கள், உங்களுடைய தலையை கீழே தாழ்த்தி விடுங்கள்' என்று கூறினேன்.

185. நான் தொடர்ந்து ஜெபிக்கத் துவங்கினேன், அவனோ தனது தலையைத்

தாழ்த்தவில்லை. நான் சுற்றும் முற்றும் திரும்பிப்பார்த்தேன்; அங்கே ஒரு ஆள் இவ்விதமாக தன்னுடைய தலையை வைத்துக் கொண்டு பின்னால் உட்கார்ந்து கொண்டிருந்தான், ஏறக்குறைய எட்டு அல்லது பத்து பேர் அவனோடு இருந் தனர், அல்லது அதற்கும் அதிகமான பேர்கள் இருந்தனர். நான், ‘ஐயா, உம் முடைய தலையை கீழே தாழ்த்தி வையும்’ என்றேன்.

அவன், ‘இது ஒரு பொது இடம், நான் அப்படி செய்ய வேண்டியதில்லை’ என்றான்.


நான், ‘சரி, அப்படியானால், அது உம்மைப் பொறுத்தது’ என்று கூறி விட்டு, ‘பிதாவே, அந்த மனிதனின் நிலையின் நிமித்தமாக இந்த அப்பாவி பிள்ளை அவதிப்பட அனுமதியாதேயும்’ என்றேன்.

186. இது சரியா இல்லையா என்று ஆர்கன்ஸாஸிலுள்ள ஜோன்ஸ்போரோ வில் இருக்கும் பழைமை நாகரீகமான வேதாகம வேளை கூடாரமாகிய ஜோன்ஸ் போரோ கூடாரத்தைச் சேர்ந்த ரிச்சர்ட் T. ரீட் (Richard T. Reed) அவர்களைக் கேட்டுப்பாருங்கள். லிட்டில் ராக்கிலுள்ள, 505, விக்டர் தெருவைச் சேர்ந்த G. H. பிரௌன் அவர்களையும் கேட்டுப் பார்க்க லாம், அவர் அங்கே இருந்தார்.

187. அந்த வலிப்பு நோய் அந்தப் பிள்ளையை விட்டு விலகியது, ஒரு குறிப்பிட்ட ஸ்தாபனத்தைச் சேர்ந்த 28 பேர் - மேய்ப்பரும் அந்த எல்லா 28 பேரும் வலிப்பு நோயை வாங்கிக் கொண்டார்கள், அவர்கள் வாயில் நுரை தள்ளியபடி, சரியாக அங்கே சபையோர் இருந்த இடத்திலேயே தரையில் விழுந் தார்கள். நான் அறிந்துள்ள வரைக்கும்,

அவர்கள் இன்னும் அதை வைத்திருக்கிறார்கள். **அவர்களில் அநேகர் வந்தார்கள், நான், 'எனக்கு அதனோடு எந்த சம்பந்தமும் கிடையாது; அது ஒரு தேவனுடைய சாபம், எனவே அது உங்களைப் பொறுத்தது. கீழ்ப்படியாமலிருந்தவன் நீ தான். உனக்கு விசுவாசம் இல்லை என்றால், கூட்டத்தை விட்டு வெளியே போய் விடு என்றும், அதைச் செய்ய வேண்டாம் என்றும் நான் உன்னிடம் கேட்டுக் கொண்டேனே. இப்பொழுது, அது உன்னைப் பொறுத்தது. எனக்கு அதனோடு எந்த சம்பந்தமும் கிடையாது. நான் அந்த பாவத்திற்காக ஜெபிக்கவும் மாட்டேன். இல்லை, ஐயா. அது உன்னைப் பொறுத்தது' என்று கூறி விட்டேன்.**




தேவன் ஜெபத்திற்குப் பதிலளிக்கிறாரா? ஆம். அவர் துரிதமாக பதிலளிக்கிறாரா? எல்லா நேரங்களிலுமல்ல. அவர் அப்படி செய்கிறாரா? இல்லை. சில நேரங்களில் நம்மைக் காத்திருக்கச் செய்கிறார். அது சரியா? ஆனால் தேவன் ஜெபத்திற்குப் பதிலளிக்கிறார்.
மோசேயைக் குறித்த போதனை, 56-0513, பத்தி எண் 84
வில்லியம் மரியன் பிரன்ஹாம்


...ஒவ்வொரு நாளும் குறைந்தபட்சம் ஒரு அதிகாரமாவது பரிசுத்த வேதாகமத்திலிருந்து படிக்க வேண்டும்; பின் ஜெபிக்க வேண்டும். பாருங்கள்? எப்போதும் அதை செய்யுங்கள்.
தேவன் தம்முடைய வரங்களைக் குறித்து சாட்சி பகருதல், 52-0713 E, பத்தி எண் E-11
வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# கழுகின் சத்தம்

## டிசம்பர் 11, 2023

**2**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து